செய்தி இதழாகப் பதிவு பெற்றது

# தந்தி

இல: 1098 | 1970 ஆகஸ்ட் 3 திங்கட் கிழமை | விலை சதம் 5

University of Jaffna Sri Lanka
RECEIVED
'71 -7- 8
Periodicals Division
Library

## மீனாட்சி



என்னுங்க, அரிசி விலை அதிகரிப்பதும், டாக்ஸி மீட்டர் அதிகரிப்பதும் ஒரு நாளும் குறையாதா?

ஆமாங்க, எல்லா அரசும் வாயைப் பிளக்கின்றதல்லாமல் அடித்து நிறுத்துவதாகக் காணவில்லை!

### கலவரம்

ஹார்ட்போர்ட், ஆக. 2

நீக்ரோக்கள் பெரும்பான்மையாக வாழும் ஹார்ட்போர்ட் நகரில் ஏற்பட்ட கலவரத்தில் ஒருவர் கொல்லப்பட்டார்.

கடை ஒன்றைச் சூறையாடிக் கொண்டிருந்த இளைஞர் கூட்டம் ஒன்றின் மீது பொலீஸார் சுட்டபோது 28 வயது இளைஞர் கொல்லப்பட்டார்.

## தேடுதல் முயற்சிகள் தோல்வி

# உணவுக் கப்பல் கடலில் மூழ்கியதா?

**ஐயாயிரம் தொன் பம்பாய் வெங்காயம் ஏற்றி வந்த உணவுக் கப்பல் அதிலிருந்த 16 பேருடன் கடலில் மூழ்கியதா? இந்தக் கப்பலைக் கண்டு பிடிப்பதற்கு இதுவரை மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் ஒன்றுமே பயனளிக்கவில்லை.**

தூத்துக்குடியில் இருந்து புறப்பட்டு வந்த இக்கப்பல் கடந்த மாதம் 21-ம் திகதி கொழும்பை அடைந்திருக்க வேண்டும். ஆனால், இதுவரையில் இந்தக் கப்பலைப் பற்றிச் சரியான தகவல்கள் எதுவும் கிடைக்கவில்லை.

காணமல் போன கப்பலைச் சேர்ந்தது என்று கருதப்படும் ஒரு படகும் சில வெங்காயப் பைகளும் தனுஷ்கோடிக்கு அருகில் காணப்பட்டதாக தனுஷ்கோடிக்கும் தலைமன்னருக்கும் இடையில் சேவை செய்யும் ஏர்வின் என்ற கப்பலில் இருந்து நேற்றுத் தகவல் கிடைத்தது.

இந்த தகவலைத் தொடர்ந்து பிரஸ்தாப உணவுக் கப்பல் மூழ்கி இருக்கலாம் என்ற ஐயம் ஏற்பட்டு இருக்கிறது.

காணமற் போன கப்பலில் இருந்தவர்கள் தனுஷ்கோடிக் கரையில் ஒரு தீவில் இறங்கி இருக்கலாம் என்று இந்திய அதிகாரிகள் நம்பிக்கை தெரிவித்ததாக உத்தியோகப்பூர்வமான வட்டாரங்கள் தெரிவித்தன.


கப்பல் இருக்கும் இடம் பற்றி இதுவரையில் எந்தத் தகவலும் கிடைக்கவில்லை என்றும், தேடுதலில் ஈடுபட்டுள்ள விமானப் படை விமானங்களுக்கும் தீவில் மனித நடமாட்டம் இருக்கும் அறிகுறிகள் ஏதும் தென்படவில்லை என்றும் அதே வட்டாரங்கள் கூறின.

கப்பலைக் கண்டு பிடிப்பதற்கான முயற்சிகள் தொடர்ந்து நடைபெறுகின்றன. இந்திய விமானப் படை விமானங்கள் தனுஷ்கோடிக்கும் தலைமன்னருக்கும் இடையில் கப்பலைத் தேடித் திரிகின்றன. (ஐ)

(முந்திக் கிடைத்த செய்தியை 3-ம் பக்கத்தில் காண்க)



நேற்று களனி - பொல்லேகல வீதியில் இ. போ. ச. இரட்டைத் தட்டு பஸ் ஒன்று ரயில் பாலத்தின் மேல் கூட்டில் மோதி விபத்துக்குள்ளானது. பஸ்ஸின் கூரை முற்றாகக் கழன்று கீழே விழுந்து விட்டது. விபத்து நடந்த வீதியால் இரட்டைத் தட்டு பஸ்கள் போவதில்லை என்றும் இந்த பஸ்ஸை சாரதி தவறுதலாக ஓட்டிச் சென்றுள்ளதாகவும் தெரிகிறது. கூரையை இழந்த பஸ்ஸை மேலே உள்ள படத்திலும் கூரை கீழே விழுந்து கிடப்பதைக் கீழே உள்ள படத்திலும் காணலாம். (ஐ)



## பொலீஸ் ஜீப் தலை கீழானது
### இன்னொன்று கடலில் விழுந்தது

பொலீஸ் ஜீப் ஒன்று பாதையை விட்டு விலகி தலை கீழாகப் புரண்டது. அதில் இருந்த மூன்று பொலீஸ் உத்தியோகத்தர்கள் காயங்களுடன் பருத்தித்துறை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்.

கடத்தல் பொருள்களை ஏற்றிச் சென்றதாகச் சொல்லப்படும் ஒரு மோட்டார் வண்டியை விரட்டிச் செல்லும்போதே பொலீஸ் ஜீப் இவ்வாறு விபத்துக்கு உள்ளானதாகத் தெரிகிறது.

இன்ஸ்பெக்டர் சிறிவர்தன, கான்ஸ்டபிள்கள் விஜேதுங்க, அப்புஹாமி ஆகியோர் ஜீப்பில் இருந்தனர்.

**கிண்ணியாவில்**

மற்றொரு பொலீஸ் ஜீப் ஐந்து பொலீஸ்காரர்களுடன் கடலுக்குள் விழுந்தது.

கிண்ணியாத் துறையில் உள்ள பாதையில் ஏறும்போது இந்த விபத்து நடைபெற்றது.

ஜீப்புடன் கடலில் விழுந்த பொலீஸார் அதிர்ஷ்ட வசமாக காயம் ஏதுவும் இன்றித் தப்பினர். மிகுந்த சிரமத்துடன் கடலில் இருந்து ஜீப் வெளியே எடுக்கப்பட்டது. (ஐ)

## ரயில்களில் பிச்சைக்காரர் தொல்லை

ரயில்களில் பிச்சைக்காரர் தொல்லை நாளுக்கு நாள் பெருகிக் கொண்டு வருகிறது. ஒவ்வொரு ரயிலிலும் பத்துப் பதினைந்து பிச்சைக்காரர்கள் தினந்தோறும் பிச்சை எடுக்கின்றனர்.

ஒரு முறை எடுத்த டிக்கட்டை வைத்துக் கொண்டு, பல நீண்ட தூர ரயில்களில் ஏறி பிச்சை எடுக்கின்றனர்.

இவர்களின் தொல்லையால் பிரயாணிகள் மிகவும் அசௌகரியத்துக்கு உள்ளாகின்றனர்.

ரயில்வே பாதுகாப்பு சேவையும் இது பற்றி கவனிக்கவில்லை என்று பிரயாணிகள் புகார் கூறுகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புஞ்சி பொரளை கைகலப்பு சம்பவம்

# ‘பொலீஸாரை கூட்டம் வளைத்துத் தாக்கியது’

“சனக் கூட்டம் எம்மைச் சுற்றி வளைத்து, அநேக பொலீஸ் கான்ஸ்டபிள்களைத் தாக்கத் தொடங்கியது. பொலீஸாரின் உயிருக்கு ஆபத்து ஏற்படவிருந்ததால், குண்டாந்தடிப் பிரயோகம் செய்ய உத்தரவிட்டேன்”

சப்-இன்ஸ்பெக்டர் ஏ. ஏ. லயனல் அமரசேகரா மேற்கண்டவாறு கூறினார்.

பொது மக்களுக்கும் பொரளைப் பொலீஸாருக்கும் இடையில் நடைபெற்ற கைகலப்பு பற்றி, முனிசிப்பல் மாஜிஸ்திரேட் விசாரணை நடாத்தினார்.

புஞ்சி பொரளை சமசமாஜக் கட்சிக் காரியாலயத்துக்கு அண்மையில் ஜூன் 16-ந் திகதி நடைபெற்ற இக்கைகலப்பில், சமசமாஜ யூனியன் செயலாளர் சோமபால கொலம்பகே மரணமானார்.

சப்-இன்ஸ்பெக்டர் அமரசேகரா மேலும் சாட்சியம் அளிக்கையில் கூறியதாவது:—

“பொலீஸார் தாக்கப்படுவதாக தகவல் கிடைத்து, அங்கு போனேன். ஒரு பொலீஸ்காரர் தலை உடைந்து காணப்பட்டார். தாம் தாக்கப்படுவதாக பொலீஸார் கத்தினர். ஜனங்களைக் கலைந்து போகுமாறு கேட்டேன். “உனக்கும் அதே கதிதான்” எனக் கத்திக் கொண்டு கல்லால் அடித்தனர். மேலும் முன்னேறிக் கொண்டு என்னை நெருங்கினர். அப்படி வந்தவர்களில் கொலம்பகேயும், பேரய்ஸ் சகோதரர்களும் முக்கியமானவர்கள். மிகவும் ஆக்ரோஷமாக அவர்கள் பத்தடி தூரத்தில் வந்தவுடன், எமது உயிருக்கு ஆபத்து என்பதை உணர்ந்து குறுந்தடிப் பிரயோகம் செய்ய உத்தரவிட்டேன்.

பலர் விழுந்து, எழுந்து ஓடினர். திரும்பிப் பார்த்த போது சோமபாலாவை சிலர் தூக்கிச் சென்றனர். மற்றும் மூவரையும் தூக்கிச் செல்வதைக் கண்டேன். புஞ்சி பொரளை சந்தி வரை எல்லோரையும் துரத்தி விட்டு வந்தேன்.

கான்ஸ்டபிள் இரத்நாயகா, செனிவிரத்னவின் சட்டைகள் கிழிக்கப்பட்டு, காயங்களிலிருந்து இரத்தம் வழிந்தோடியது. வானுக்குள்ளும் ஒருவர் முகத்தில் காயத்துடன் விழுந்து கிடந்தார். சோமபாலாவை அடித்தது யார் என்று எனக்குத் தெரியாது. நாங்களாக சமசமாஜ யூனியன் காரியாலயத்துக்குள் செல்லவில்லை” என்று கூறினார்.

மற்றும் சிலர் சாட்சியம் அளித்த பின் மேல் விசாரணை ஆகஸ்ட் 8-ந் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது. (15)

## பணிப் பெண் கொலை

பன்னிரெண்டு வயதுப் பணிப் பெண்ணைக் கொலை செய்து கயிற்றில் கட்டித் தூக்கியதாக புங்குடுதீவைச் சேர்ந்த மூன்று பெண்கள் மீது குற்றம் சாட்டி ஊர்காவற்றுறை மாஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் ஊர்காவற்றுறைப் பொலீஸார் வழக்கொன்றைத் தாக்கல் செய்துள்ளார்கள்.

கலேவெல என்ற இடத்தைச் சேர்ந்த வள்ளித்தாய் என்ற பணிப் பெண்ணைக் கொலை செய்ததாக புங்குடுதீவு மேற்கைச் சேர்ந்த செல்லத்தம்பி மேனகையம்மா, பேரின்பநாதன் மங்கையர்க்கரசி, பரமஜோதி கனகம்மா ஆகிய மூவர் மீதும் இவ்வழக்கில் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. (7)

## மனைவியரின் பெயரில் இன்சூரன்ஸ் ஏஜன்ஸிகள்

மனைவிமார்களையும், உறவினர்களையும் “இன்சூரன்ஸ்” ஏஜென்டுகளாக பதிவு செய்து, அதன் மூலம் கமிஷன் பணம் பெற்று வரும், காப்புறுதிக் கூட்டுத்தாபன ஊழியர்கள் சிலரின் செய்கையையிட்டு காப்புறுதிக் கூட்டுத்தாபன “டைரக்டர்” குழு கவலை கொண்டுள்ளது.

இப்படியான புகார்கள் பல கூட்டுத்தாபன் “டைரக்டர்” களுக்கு கிடைத்துள்ளது. கூட்டுத்தாபன ஊழியர்கள் சிலரால் நடாத்தப்படும் இந்த முறையற்ற செயலை இனிமேலும் அனுமதிக்கக் கூடாதென “டைரக்டர்” குழு கருதுகிறது.

ஒழுங்கான இன்சூரன்ஸ் ஏஜென்டுகள் அலைந்து திரிந்து இன்சூரன்ஸ் பொலிசிக்கு ஆட்களைச் சேர்க்கும் வேளையில், கூட்டுத்தாபன உயர் அதிகாரிகள் கதிரையில் இருந்த வண்ணமே கருமமாற்றி புதியவர்களை சேர்த்து விடுகிறார்கள் என அப்புகார்களில் தெரிவிக்கப்பட்டுள்ளன.

நேரடியாக கூட்டுத்தாபனத்துடன் தொடர்பு கொள்பவர்களையும் இவ்வுயர் அதிகாரிகள் தமக்குத் தேவையானவர்களின் ஏஜென்சிகளின் கீழ் பதிவு செய்தும், பணம் பெறுகிறார்கள் எனவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இப்படியான துறைகளில் பணம் பெற்று வரும் கூட்டுத்தாபன உத்தியோகத்தர்களின் ஏஜென்சிகளை ரத்துச் செய்வதுடன் அவர்கள் மீது தகுந்த நடவடிக்கை எடுக்கும்படியும் கூட்டுத்தாபன “டைரக்டர்கள்” குழுவிற்கு உள்நாட்டு, வெளிநாட்டு வர்த்தக அமைச்சர் திரு. ரி. பி. இலங்கரத்தின உத்தரவிட்டுள்ளார். (7)

## வேறெங்குகிடைக்கும்?

சர்வதேச மூளை ஆராய்ச்சிக் கழகம் தனது இவ்வாண்டுக் கருத்தரங்கத்தைப் பேராதனைப் பல்கலைக் கழக வைத்தியப் பகுதியில் நடாத்த இருப்பதாகத் தெரிவித்துள்ளது. அருமையான இடத்தைத் தெரிவு செய்ததற்குக் கழகத்தின் இயக்குனர்களைப் பாராட்ட வேண்டும். சில நாட்களுக்கு முன்னர் பல்கலைக் கழக அதிகாரிகள், ஆங்குள்ள பெருந் தொகையான மாணவர்கள் சில சந்தர்ப்பங்களில் நூதனமாக நடந்து கொள்வதற்குக் காரணம், அவர்கள் பல்வேறு விதமான மூளைக் கோளாறுகளால் வருந்துவதேயாகும் என்று கூறியிருந்தார்கள். எனவே சர்வதேச நிபுணர்கள் தங்கள் ஆராய்ச்சிகளுக்கு வேண்டிய சமதைகளை (ஒப்புக்களை)க் கருத்தரங்கு மண்டபத்திலும் அண்மையிலும் பெற்றுக் கொள்ள மிகுந்த வாய்ப்பு உண்டு. இது இலகுவில் வேறெங்காவது கிடைக்குமா?

தந்தி

## வாலிபர்களுடன் கூடிக் குலாவுகிறாள் என் மனைவி

“முறைப் பாட்டுக்காரரான எனது மனைவி ஓர் வண்ணத்திப் பூச்சி போன்றவள். பல பேரில் ருசி பார்ப்பதே அவள் சுபாவம். அவளுக்கு என் மேல் பிரியம் இல்லை. சிறீபாலா‌தான் அவளின் ஆசை நாயகன். அவளுக்குள்ள ஒரே ஆசை அழகிய இளம் வாலிபர்களுடன் கூடிக் குலாவி தன் ஆசையைப் பூர்த்தி செய்ய வேண்டும் என்பதே.”

இரத்தினபுரி நீதவான் திரு. ஸ்ரீலால் பெரேரா முன்னிலையில் எடுக்கப்பட்ட தாபரிப்பு வழக்கொன்றில் சாட்சியம் அளித்த எதிர் மனுதார் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஜி. சேபிநோனா என்ற பெண்மணி தனது கணவரான கே. சிறீசேனா தன்னை வேண்டும் என்றே கைவிட்டு விட்டதாகவும், ஆகவே அவரிடம் இருந்து தனக்கு தாபரிப்புப் பணம் பெற்றுத் தரும்படி கோரி இவ்வழக்கைத் தாக்கல் செய்திருந்தாள்.

எதிர்மனுதாரின் சாட்சியத்தின் முடிவில் முறைப்பாட்டுக்காரர் சாட்சியம் அளிக்கையில் கூறியதாவது:— “எதிர்மனுதாரான எனது கணவனால் கூறப்பட்டவைகள் அனைத்தும் பொய்யான தகவல்களாகும். நான் அவர் கூறியது போல் கெட்ட நடத்தையுடைய பெண் அல்ல.

“எனக்கும் சிறீபாலாவிற்கும் நெருங்கிய தொடர்பு எதுவும் இல்லை. இதில் உண்மை என்னவெனில் எனது கணவருக்கும் சிறீபாலாவின் மனைவிக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு.

இவ்வேளையில் நீதவான் எதிர் மனுதாரரை நோக்கி. “நீங்கள் இருவரும் ஏன் இரு வேறு திசைகளில் செல்கிறீர்கள்? திரும்பவும் ஒற்றுமையான, சந்தோஷமான ஓர் வாழ்க்கை வாழ முயற்சிப்பது நல்லது”

எதிர்மனுதார்:- “நான் இது பற்றி நன்றாக சிந்தித்தேன். எனது மனைவிக்கும் சிறிபாலாவிற்கும் தொடர்பு இருக்கும் வரை இது ஒரு போதும் சாத்தியமாகாது. இருவருக்கும் உள்ள கள்ளத் தொடர்பை எனது மகனே நேரில் கண்டுள்ளான்”.

மனுதார்:- “இவரது ஒவ்வொரு வார்த்தையும் பொய். எனது கணவன் உயிருடன் இருக்கும் போதே, எனக்கேன் இளம் வாலிபர்கள்? இவருக்கும் சிறீபாலாவின் மனைவிக்கும் இடையே உள்ள கள்ளத் தொடர்பே எங்கள் திருமண வாழ்க்கைக்கு முட்டுக் கட்டையாக வந்துள்ளது.”

எதிர் மனுதார்:- “நான் சுருக்கமாகவும், விளக்கமாகவும் சொல்ல விரும்புவதென்னவெனில், நான் இவளுக்கு தாபரிப்புப் பணம் செலுத்தத் தயாராயில்லை. ஏனெனில் இவளுக்கு இன்னுமோர் ஆடவருடன் தொடர்பு உண்டு. ஆகவே அவளை வேறு ஏதாவது வழியைப் பார்க்கச் சொல்லுங்கள்”.

மனுதார்:- “அவர் எப்போதாவது வாய் திறந்தாராயின், அவரது வாயில் ஆபாச வார்த்தைகள் தான் வெளிவரும், ஐயா!”

இந்த நிலையில் விசாரணை ஆகஸ்ட் 6-ம் திகதிக்கு பின் போடப்பட்டது. (7)

## வார்ட்டில் புகுந்து தாதியை மிரட்டினர்

நுவரேலியா ஆஸ்பத்திரியில் கடமையாற்றிய தாதியை, தகாத முறையில் பலாத்காரம் புரிய முயன்றவர், நாலு மாதக் கடூழியச் சிறைத்தண்டனை பெற்றார்.

1970 மே மாதம் 29-ம் திகதி 3-ம் நம்பர் வார்டுக்குள் பலாத்காரமாகப் புகுந்து, அங்கு கடமையாற்றிய பி. தம்பிப்பிள்ளை என்னும் தாதியை பலாத்காரம் புரிய முயன்றாராம் ஹாவஎலியவைச் சேர்ந்த, 28 வயதான, டி. எஸ். ஜயசிங்க என்பவர்.

இவ்வழக்கு நுவரேலியா மாஜிஸ்டிரேட் திரு. ஜே. பி. ஸி. சுவாரிஸ் முன்னிலையில் விசாரிக்கப்பட்டது.

தாதி சாட்சியமளிக்கையில் கூறியதாவது:—

“சம்பவம் நடந்த அன்று 1-40 மணியளவில் என் வார்ட்டுக்குள் வந்து என் தோளைப் பற்றினர். “உன்னை ஒரு கிழமைக்குள் இங்கிருந்து அனுப்பி விடுவேன்” என்று கூறினர். பயத்தால் நான் கத்தினேன். வார்ட்டில் இருந்த மூவர் ஓடிவந்து எதிரியைப் பிடித்து பொலீஸில் கொடுத்தனர்” என்று கூறினர்.

எதிரியைக் குற்றவாளியாகக் கண்ட நீதவான், நாலு மாதக் கடூழியச் சிறைத்தண்டனை விதித்தார்.

நுவரெலிய பொலீஸ் இன்ஸ்பெக்டர் திரு. டி. எஸ். ஜே. லாப்ரோய் வழக்கை நடத்தினர். (15)

## தேர்தல் வழக்கு

முன்னாள் பிரதமரும், டெடிகம நாடாளுமன்ற உறுப்பினருமான திரு. டட்லி சேனநாயக்கா நாடாளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டதை ஆட்சேபித்து தாக்கல் செய்யப்பட்ட தேர்தல் வழக்கு இன்று கொழும்பில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

கடந்த ஜூன் மாதம் 21-ம் திகதி இந்த ஆட்சேப மனு கொழும்பில் தாக்கல் செய்யப்பட்டது. ஜூலை 28-ம் திகதி நீதியரசர் திரு. ஜி. ரி. சமரவிக்ரமா தலைமையில் இரு தரப்பு வழக்கறிஞர்களும் கூடி திகதி நிர்ணயம் பற்றி ஆராய்ந்தனர். இன்று காலை வழக்கு விசாரணையை ஆரம்பிப்பதென அன்று முடிவு செய்யப்பட்டது.

## அல்பதாஹ் பிரசார நிலையம்

பாலஸ்தீன விடுதலை இயக்கமான “அல்-பதாஹ்” இயக்கத்தின் பிரசார நிலையம் ஒன்று அதிவிரைவில் இலங்கையில் திறக்கப் படலாம் எனத் தெரிகிறது.

தற்போது இங்கு விஜயம் செய்து உள்ள “அல்-பதாஹ்” இயக்க தூதுகோஷ்டியினர் நேற்றுக் கூட்டிய பத்திரிகையாளர் மகாநாட்டில் இந்தத் தகவல் வெளியிடப்பட்டது.

தாங்கள் இதுபற்றி பிரதமர் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவிடம் ஒரு கோரிக்கை விடுக்கப்போவதாகவும், பாலஸ்தீன விடுதலை இயக்கத்தின் மீது ஆதரவு காட்டும் பிரதமர், தங்கள் கோரிக்கையை ஏற்றுக் கொண்டு, பிரசார நிலையத்தை நிறுவுவதற்கான அனுமதியை வழங்குவார் எனத் தாம் நம்புவதாகவும் “அல்-பதாஹ்” இயக்கத் தூதுக்குழுவினர் தெரிவித்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணமாகாத மேரி மகவு பெற்றாள்

# கொன்று புதைத்ததாக குற்றஞ்சாட்டப்பட்டாள்

இரகசியமாகப் பிள்ளையைப் பெற்று, புதைத்த ஒரு இளம் பெண்ணை சிலாபப் பொலீஸார் கைதுசெய்து விசாரித்தனர். முன்னேஸ்வரம், மகாயாய என்னுமிடத்தைச் சேர்ந்த 20 வயது மேரி என்னும் இளம் பெண்தான் இக் குற்றத்தைப் புரிந்தாளாம்.

தகவலின் பேரில் பொலீஸார் இவளை விசாரித்து, அழுகிய நிலையில் ஒரு குழந்தையையும் தோண்டி எடுத்தனர்.

சிலாபம் மரண விசாரணை அதிகாரி ஜனாப் கே. ஏ. எல். கான் விசாரணை நடத்தினார்.

எம். ஏ. சோபிஹாமி என்னும் பெண் சாட்சியமளிக்கையில் கூறியதாவது:—

"ஜூலை 20-ந் திகதி மாலை 5-00 மணியளவில் குளிக்கப் போனேன். மேரி அலறுவதைக் கேட்டு அவளின் வீட்டினுள் சென்றேன். பக்கத்தில் பிறந்த குழந்தையுடன் துடித்துக் கொண்டிருப்பதைக் கண்டேன். அதன் பிறகு குழந்தையைக் காணாதபடியால் சந்தேகப்பட்டேன் மேரி கல்யாணமாகாதவள். தாயுடன் வசித்து வந்தாள்" என்றாள்.

மேரியின் தாயான அன்னே திரேஸா (34 வயது) சாட்சியம் அளிக்கையில் கூறியதாவது:—

"தினந்தோறும் வேலைக்குப் போய் இரவில் வீடு வருவேன். மேரி வீட்டில் தனியே இருப்பது வழக்கம். அவர் கர்ப்பிணி என்பது எனக்குத் தெரியாது. சோபிஹாமி எங்களை ஏசிய பின்தான் தெரியும். அவள் அடுத்த கிராமத்து வாலிபன் ஒருவனுடன் சிநேகமாக இருந்ததாகக் கூறினாள். குழந்தையைப் புதைத்த இடம் தெரியும்" என்றும் கூறினார்.

குழந்தை அழுகிய நிலையில் இருந்த படியால், கொழும்பு சட்ட வைத்திய அதிகாரியின் பரிசோதனைக்கு அனுப்பப்பட்டது. (15)

## மின்னலுக்கு 5 குழந்தைகள் பலி

நைரோபி, ஆக. 2

கென்யா — உகண்டா எல்லையில் உள்ள பூசியா மாவட்டத்தில் உள்ள பாடசாலை மீது மின்னல் தாக்கியதால் 5 குழந்தைகள் கொல்லப்பட்டனர்.

மின்னலால் தாக்குண்ட ஒரு குழந்தை ஸ்தலத்திலேயே மாண்டது. மற்றைய குழந்தைகள் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்படும் வழியில் இறந்தன.

## கடற்கரை காடையரை 'மினி ஸ்கேர்ட்' பிடித்தான்

மஞ்சள் வெய்யில் தவழும் மாலைவேளை. மினி – ஸ்கேர்ட் நங்கையும் காதலனும் காற்று வாங்க தெஹிவளை கடற்கரைக்கு வந்தனர். இளஞ்சோடிகளைப் பயமுறுத்தி, பணம் பறிக்கும் காடையர் கூட்டம் இவர்களையும் விட்டு வைக்கவில்லை.

இளம் சோடிகளின் இக்கட்டான நிலையைக் கண்ட வாலிபர் சிலர் உதவிக்கு ஓடிவந்து, காடையரை வளைத்துப் பிடித்து, பொலீஸில் ஒப்படைத்தனர்.

தெஹிவளை பிரேஸர் அவெனியூ பகுதியில் காடையர் கூட்டம் அட்டகாசம் புரிந்து வந்தது. மாலை மங்கிய வேளையில் கடற்கரைக்கு வரும் சோடிகளை மிரட்டிப் பணம்பறித்து வந்தனர். நகைகளையும் கைப்பற்றுவதுண்டு.

மேற்படி இளம் சோடிகளின் உதவிக்குத் திரண்டவர்கள் "மினி ஸ்கேர்ட்" நங்கையின்மேல் அனுதாபப்பட்டனர். ஆனால் எல்லோருக்கும் ஒரு ஆச்சரியம் காத்திருந்தது. "மினி ஸ்கேர்ட்"டில் வந்தவர் ஒரு இளைஞன். இந்தக் காடையர் கூட்டத்தைப் பிடிக்க சில வாலிபர் போட்ட திட்டமே இதுவாகும்.

கடற்காற்றை அனுபவிக்க வருபவர்கள் இந்த இளைஞர்கள் செய்த உதவியைப் பெரிதும் பாராட்டினார்கள்.

தெஹிவளை சமசமாஜக்கட்சி வாலிபர் இயக்கத்தின் இந்த அரிய சேவையைப் பொலீஸாரும், பொதுமக்களும் பாராட்டியுள்ளனர். (ம– 15)

## மாணவர்களின் கேலி மாணவியை மாய்த்தது

16 வயதுப் பள்ளி மாணவி, பள்ளி மாணவன் ஒருவனுக்கு காதல் கடிதம் வரைந்தாளாம். இச்செய்தி காட்டுத் தீ போல் பாடசாலை முழுவதும் பரவி விட்டதை அறிந்து பெரும் வெட்கமடைந்த அவள், கிருமி நாசினி அருந்தி உயிரை மாய்த்து விட்டாள். இப்பரிதாப சம்பவம் பொலநறுவையில் இடம் பெற்று உள்ளது.

பொலனறுவை, புலஸ்திகம என்ற இடத்தைச் சேர்ந்த டீ. கே. ஜி. கமலாவதி என்ற பருவமங்கையே தற்கொலை புரிந்தவராவார். பொலன்னறுவை திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. டி. பி. ரத்நாயக்கா ஸ்தலத்தில் மரண விசாரணை நடத்தினார்.

பாடசாலையின் தலைமை ஆசிரியர் திரு. பாலித்த ஸ்ரீகம்பலேஜ் மரண விசாரணை அதிகாரி முன் சாட்சியமளிக்கையில் தெரிவித்ததாவது:—

"சம்பவம் நடப்பதற்கு இரு தினங்களுக்கு முன்னர், "இறந்தவள் என்னிடம் வந்து, "தனது சக மாணவ, மாணவிகள் தன்னைப் பற்றித் தேவையற்ற வதந்திகளைப் பரப்புவதாகப் புகார் செய்தார்.

"தான் தங்களது மாணவ சங்கத்தின் உதவி செயலாளராக பணியாற்றி வருவதாகவும், தான் மேற்படி மாணவ சங்கத்தின் செயலாளராகப் பணியாற்றி வரும் மாணவனுக்கு காதல் கடிதம் எழுதியதாக மற்றவர்கள் கதை பரப்புவதாக இறந்தவர் என்னிடம் தெரிவித்தார்" எனக் கூறினார்.

இறந்தவரின் தாயான டிங்கிரி அம்மா சாட்சியமளிக்கையில் தெரிவித்ததாவது:— "சம்பவ தினம் எனது மகள் கவலை தோய்ந்த முகத்துடன் வீடு திரும்பினார். அத்துடன் மத்தியானச் சாப்பாடும் தனக்கு வேண்டாம் எனத் தெரிவித்தார்.

"சிறிது நேரத்தின் பின்னர், அறை ஒன்றில் மகள் வாந்தியெடுக்கும் சப்தம் கேட்டு நான் ஓடிச் சென்றேன். என்ன நடந்தது என நான் அவளிடம் கேட்டேன். அதற்கு அவள்; "தான் நச்சுத் திராவகம் அருந்தி விட்டதாகவும், தான் இனி உயிர் வாழ்ந்து பயனில்லை; எனது சக மாணவ, மாணவிகள் என்னைப்பற்றி கூடாத வைகளையெல்லாம் கட்டுகிறார்கள் என்றார்.

"பின்னர் பொலனறுவை ஆஸ்பத்திரிக்கு அவளைக் கொண்டு சென்றோம். அங்கு அவள் உயிர் பிரிந்தது."

திடீர் மரண விசாரணை அதிகாரி தற்கொலை எனத் தீர்ப்பளித்தார். (7)

## கப்பலைக் காணவில்லை வெங்காயம் தட்டுப்பாடு

பம்பாய் வெங்காயம் ஏற்றி வந்த பாய்க்கப்பல் ஒன்றை இந்து சமுத்திரம் முழுவதும் தேடி வருகின்றனர். இதில் 5000 தொன் பம்பாய் வெங்காயம் ஏற்றப்பட்டிருந்தது.

தூத்துக்குடியிலிருந்து புறப்பட்ட இப் பாய்க்கப்பல் ஜூலை 21-ல் கொழும்பு வந்திருக்க வேண்டும். ஆனால், அது இன்னும் வந்து சேரவில்லை.

இக்கப்பலைத் தேடுமாறு சகல கப்பல்கள், விமானப்படை ஆகியவற்றுக்கு வானொலிச் செய்தி அனுப்பப்படுகிறது.

இக்கப்பலில் எத்தனை மாலுமிகள் உள்ளனர் எனத் தெரியவில்லை. இந்திய, இலங்கை அரசாங்கங்கள் இதையிட்டு கவலை அடைந்துள்ளன. இரு நாட்களுக்குத் தேவையான உணவு வகைகளே அக்கப்பலில் இருந்தனவாம். எப்படியும் இதைக் கண்டுபிடித்து விடலாம் என நம்பப்படுகிறது.

இங்கு பம்பாய் வெங்காயத்திற்கு தட்டுப்பாடு ஏற்படலாம் என அபிப்பிராயம் தெரியப்படுத்தப்படுகிறது. 5000 தொன் பம்பாய் வெங்காயமும் வந்து சேரா விட்டால் பெருந் தட்டுப்பாடு ஏற்படலாம்.

இதற்கு ஈடாக வேறு எங்காவது இருந்து பம்பாய் வெங்காயம் தருவிக்க ஆலோசிக்கப்படுகிறது. (15)

## கடையை உடைத்தவர் துப்பாக்கிக்குப் பலி

அமெரிக்கா, ஆக. 3

நீக்ரோ வடக்கு முனை மாவட்டங்களுள் ஒன்றில் கடந்த மூன்று தினங்களாக, மாலை முதல் காலை வரையிலான ஊரடங்குச் சட்டத்தின் இறுதி நாளன்று நடந்த பொலீஸாரின் துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒருவர் உயிர்நீத்தார்.

எப்றெயிம் தொன்ஸாலின் என்ற 28 வயது இளைஞனே நெஞ்சில் குண்டடிபட்டு இறந்தவராவார். கலகம் நடைபெற்ற இப் பிரதேசத்தில் கடை ஒன்றை உடைப்பதில் ஈடுபட்டிருந்த இளைஞர் கோஷ்டியைக் கலைப்பதற்காகவே துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டதெனத் தெரிகிறது.

ஊரடங்குச் சட்டத்தின்போது பலாத்கார செயல்களில் ஈடுபட்டார்கள் என்ற சந்தேகத்தின் பேரில் மொத்தம் 19 பேர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். ஆனால் பலாத்காரச் செயல் அந்த இரவு மட்டுமே இடம்பெற்றதாகத் தெரிவித்தனர் பொலீஸ் அதிகாரிகள்.

ஊரடங்குச் சட்டம் நடைமுறையில் இருந்ததால் திருட்டு, கைக்குண்டு வீச்சு, போத்தல் வீச்சு முதலிய பலாத்கார செயல்களை ஓரளவு தடுத்து அமைதியை நிலைநாட்டக் கூடியதாக இருந்ததென பொலீஸார் கருதுகின்றனர்.

அப்படியிருந்தும் நேற்று முன்தினம் மேஜர் ஆன்யுகிலோ அவசர காலச் சட்டத்தைப் பிரகடனப்படுத்தினார். நேற்று முன்தினம் மூன்று பொலீஸ் உத்தியோகஸ்தர்கள் உட்பட ஆறுபேர்கள் பலாத்கார சம்பவங்களால் படுகாயம் அடைந்தார்கள். இச் சம்பவம் சம்பந்தமாக மொத்தம் 125 பேர்கள் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டுள்ளார்கள். (— 7)

## இன்று கொடியேற்றம்

கல்முனைக்குடி, ஆக. 3

கல்முனைக்குடி கடற்கரை பள்ளி வாசல் கொடியேற்று விழா இன்று ஆரம்பமாகிறது.

கொடியேற்று விழா நிகழ்ச்சிகள் ஒலிப்பதிவு செய்யப்பட்டு வானொலியில் ஒலிபரப்பப்படும் என நம்பகமாக அறியப்படுகிறது.

## பொஸ்டரின் உடல்நிலை

கேப்டவுன், ஆக. 2

ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ள தென் ஆபிரிக்கப் பிரதமர் திரு. ஜோன் பொஸ்டரின் தேக நிலைமை திருப்தியாக இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

வயிற்றுவலி காரணமாக திரு. பொஸ்டர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

## காயமுற்ற இளைஞனை தோளில் சுமந்தார் மேயர்

பதுளை பெரிய ஆஸ்பத்திரியில் நடக்க முடியாத நோயாளிகளை வார்டுகளுக்கு அதற்கான "ஸ்ரெட்சரில்" வைத்து தள்ளிச் செல்வதற்கு ஆட்களில்லை.

இந்த உண்மையை இரு தினங்களுக்கு முன் பதுளை மேயர் திரு. டியுடர் விஜய சேகராவும் உதவி மேயர் ஜனாப் அப்துல்லா சாகிப்பும் நேரில் கண்டு கொண்டனர்.

மேயரும் உதவி மேயரும் காரில் கடுமையான காயமுற்ற ஒரு இளைஞனை, அவசரமாக அனுமதிப்பதற்கென பதுளை ஆஸ்பத்திரிக்கு எடுத்து வந்தனர்.

காரில் இருந்து டாக்டரின் அறைக்கு அந்த இளைஞனை எடுத்துச் செல்வதற்கு "ஸ்ரெட்சர்" தள்ளுபவர்கள் எவரும் இருக்கவில்லை மேயரே அந்த இளைஞனை தனது தோளில் சுமந்து கொண்டு டாக்டரின் அறைக்கு எடுத்துச் சென்றார்.

இளைஞனின் காலில் இருந்து இரத்தம் சொட்டிக் கொண்டிருந்தது. அவனைப் பரிசோதித்த டாக்டர், அவசர சிகிச்சைக்காக பதினேழாம் வார்ட்டுக்கு எடுத்துப் போக வேண்டும் என்றார். ஆனால் அங்கேயும் "ஸ்ரெட்சர்" தள்ளுவதற்கு எவரும் இருக்கவில்லை.

மேயர் இளைஞனை தனது தோளில் இருந்து இறக்கி, உதவி மேயரின் உதவியுடன் "ஸ்ரெட்ச"ரில் படுக்க வைத்தார். பின்னர் இருவருமாக அந்த வண்டியைத் தள்ளிக் கொண்டு போய் பதினேழாம் வார்டில் இளைஞனை அனுமதித்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வல்லிபுரக் கோயில் நிர்வாகத் தெரிவு

# காரணம் காட்டுமாறு நீதவான் நோட்டீஸ்

பருத்தித்துறை, ஆக 2

பருத்தித்துறைப் பகுதியில் உள்ள வல்லிபுரக் கோவில் பரிபாலனத்தில் சம்பந்தமுடைய எட்டுப் பேர் மீது நோட்டீஸ் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

ஆகஸ்ட் மாதம் 17ந் திகதி பருத்தித்துறை நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு பருத்தித்துறை நீதிபதி திரு ஏ. வைத்திலிங்கம் அவர்களுக்கு நோட்டீஸ் பிறப்பித்துள்ளார்.

பசுபதி நாகலிங்கம் என்பவர் பருத்தித்துறை நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனு ஒன்றை தொடர்ந்தே சம்பந்தப்பட்டவர்கள் மீது நோட்டீஸ் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

பிரஸ்தாப ஆலய நிர்வாகம் சம்பந்தமாக முன்னர் பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கின் தீர்ப்புக்கு இணங்க பரிபாலன சபையின் முதலாவது கூட்டத்துக்கு நீதிமன்றம் நியமிக்கும் ஒரு அதிகாரி ஏன் தலைமை வகிக்க கூடாது என்பதற்கு காரணம் காட்டுமாறு கோரியே எட்டுப் பேர்களுக்கும் நோட்டீஸ் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

பிரஸ்தாப ஆலய நிர்வாகம் குறித்து பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றத்தில் தொடரப்பட்ட 72ம் இலக்க பரிபாலன வழக்கின் தீர்ப்பில், மற்றும் பல நிபந்தனைகளுடன் ஆலயபரிபாலன சபையின் முதலாவது கூட்டத்துக்கு நீதிமன்றம் அதிகாரமளிக்கும் அதிகாரி ஒருவர் தலைமை வகிக்க வேண்டும் என்றும், அந்தக் கூட்டத்தில் உத்தியோகஸ்தர்கள் தெரிவு செய்யப்பட வேண்டும் என்றும் கூறப்பட்டிருந்தது.

அந்த தீர்ப்பை ஆட்சேபித்து முருகர் காசிநாதர் என்பவர் அப்பீல் செய்திருந்தார். ஆனால் அவர் இப்போது தனது அப்பீலை வாபஸ் பெற்றுவிட்டார்.

மாவட்ட நீதிமன்றத் தீர்ப்பிற்கு இணங்க பரிபாலன சபையின் முதலாவது கூட்டத்தை நடத்துமாறு கோரி பசுபதி நாகலிங்கம் என்பவர் இப்போது பருத்தித்துறை நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்திருக்கிறார்.

அதைத் தொடர்ந்து பின்வருவோர் மீது பருத்தித்துறை நீதிபதி நோட்டீஸ் பிறப்பித்துள்ளார்: முருகர் காசிநாதர், மயில்வாகனம் செல்லத்துரை, வினாசித்தம்பி சந்திரசேகரம், நாராயணபிள்ளை சின்னையா, தம்பிப்பிள்ளை வன்னியசிங்கம், மாப்பாணர் வேலுப்பிள்ளை, ஆழ்வாப்பிள்ளை இராசரத்தினம், குழந்தைவேலு இரத்தினசிங்கம். (ஞ-10)

## விசாரணை நடவடிக்கை

விசேஷ விசாரணைக் கமிட்டி ஒன்று, தொழில் இணிக்களத்தில் இடம் பெற்றதாகக் கூறப்படும் ஒரு ஒழுங்கீனம் பற்றி விசாரணை நடாத்தி வருகிறது.

சென்ற நாடாளுமன்றம் கலைக்கப்படுவதற்கு ஒருசில நாட்களுக்கு முன்னர் திணைக்களத்தில் குறிப்பிட்ட ஓர் அதிகாரி பல லட்ச ரூபாக்களுக்கான செக் ஒன்றை எடுத்தது சம்பந்தமாகவே விசாரணை நடைபெறுகிறது.

திணைக்களத்திலுள்ள தொழிற் சங்கம் ஒன்று இத் தகவல்களைத் தெரியப்படுத்தியது. (7)

## பளபளப்புக்கு உறை!

மாஸ்கோ, ஆக 2

தட்டுமுட்டுச் சாமான்களுக்கு வார்னிஷ் பூசி பளபளப்புச் செய்வதற்குப் பதிலாக கண்ணுக்குத் தெரியாத செயற்கை உறை ஒன்றைப் பயன்படுத்தும் முறையை சோவியத் விஞ்ஞானிகள் கண்டு பிடித்துள்ளனர்.

இது நீர்க்காப்புக் கொண்டதாகும். இது கீறல் விழாதது. இது வரண்டு போகவும் மாட்டாது. இது மரத்தின் இயற்கை வனப்பை அவ்வாறே வெளிக்காட்டுவதுடன் பாதுகாத்துக் கொள்கிறது.

இந்த கண்ணுக்குத் தெரியாத உறை (பிலிம்) 160 டிகிரி ஸெண்டிகிரேட் சீதோஷ்ண நிலையைத் தாங்குகிறது. இந்த பிலிமுடன் கூடிய வீட்டுத் தளபாடங்களை பெருமளவில் உற்பத்தி செய்ய உஸ்பெகிஸ்தான் நிறுவனம் ஆரம்பித்துள்ளது. (மு-129-ச)

## பிரதமர் வாழ்த்து

நேற்று முன்தினம் நடைபெற்ற சுவிற்சர்லாந்து தேசிய தினத்தை முன்னிட்டு, பிரதமர் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா, சுவிற்சர்லாந்து கூட்டுக் குழுவின் ஜனாதிபதிக்கு வாழ்த்துச் செய்தி ஒன்றை அனுப்பி வைத்தார். (க)

## இஸ்ரவேலில் இலங்கை மாணவர் நிலை

இஸ்ரவேலில் தற்போது பயிற்சி பெற்று வரும் இலங்கை மாணவர்களின் நிலை என்ன?

இது பற்றி இலங்கை அரசாங்கம் விரைவில் தீர்மானிக்கவிருக்கிறது. இஸ்ரவேலுடனான ராஜரீக தொடர்புகளை இலங்கை நிறுத்திக் கொண்டதால் அங்குள்ள மாணவர்களைத் திருப்பி அழைக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

## 'வெளியார் ஆதிக்கம் முறியடிப்பு

பதிவுப் பிரஜைகளும், இலங்கையர் அல்லாதோரும் உள்ளூர்க் கைத்தொழில் துறையில் செலுத்தும் ஆதிக்கம் முறியடிக்கப்படும்.

விசேஷ குழு ஒன்று அரசாங்கத்துக்கு தெரிவித்த ஆலோசனையின் பேரிலேயே இந்த முடிவு மேற்கொள்ளப்பட இருக்கிறது.

இலங்கை கைத்தொழில்முறை முற்ற முழுக்க இலங்கையர் மயமாக்கப்பட இருக்கிறது. (ம)

## பாற்கடைகள் மூடப்பட்டது ஏன்?

"கொழும்பு பாவனையாளர் கூட்டுறவு சங்கத்தினால் நடத்தப்பட்ட ஐந்து பாற்கடைகள் ஏன் மூடப்பட்டன?"

இது பற்றி விசாரணை நடத்தும்படி உள்நாட்டு, வெளிநாட்டு வர்த்தக அமைச்சர் திரு. ரி. பி. இலங்கரத்தின உத்தரவிட்டுள்ளார். (ம)

## பீரங்கிக் குண்டுகள்தான் சமாதானத்தைத் தரமுடியும்

### —அல்பதாஹ் வீரர்

"பீரங்கிக் குண்டுகளின் துணையுடன்தான் மத்தியகிழக்கில் சமாதானத்தை ஏற்படுத்த முடியும். பேச்சுவார்த்தைகளினால் எவ்வித பயனும் இல்லை."

கொழும்பு சென்டரல் ரோட்டில் உள்ள முதல் பள்ளிவாசல் தெருச்சந்தியில் நேற்று மாலை நடைபெற்ற கூட்டத்தில் பேசிய அல்பதாஹ் விடுதலை வீரர் ஜனாப் அபூகஸ்ஸான் மேற்கண்டவாறு கூறினார்.

இஸ்ரவேல் நாட்டுடன் இலங்கை கொண்டுள்ள உறவை நிறுத்திக் கொண்டதற்கு நன்றி தெரிவிக்கவும், இலங்கை வந்துள்ள அல்பதாஹ் விடுதலைப் படை தூதுக்குழுவை வரவேற்கவும் என இந்தப் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

பொதுக் கூட்டம் உபசபாநாயகர் ஜனாப் ஐ. ஏ. காதர் தலைமையில் நடைபெற்றது.

அல்பதாஹ் தூதுக்குழுவின் தலைவர் ஜனாப் அபூகஸ்ஸான் அரபு மொழியில் பேசினார். அவரது பேச்சை மௌலவி ஏ. ஆர். எம். றாஹுல் ஹக் தமிழில் மொழிபெயர்த்தார்.

ஜனாப் அபூகஸ்ஸான் மேலும் பேசுகையில், "பதினேழு வருடங்களாக ஸியனிஸ ஏகாதிபத்தியவாதிகளின் அக்கிரம ஆக்கிரமிப்பில் சிக்கி பாலஸ்தீன மக்கள் அனுபவித்த இன்னல்கள் சொல்லுந்தரமன்று. இஸ்ரவேல் ஸியனிஸ ஏகாதிபத்தியவாதிகளின் கொடூரப் பிடியிலிருந்து தங்களை, தங்கள் நாட்டைக் காப்பாற்றவே அல்பதாஹ் வீரர்கள் போராடுகின்றனர்.

"அல்பதாஹ் வீரர்களின் இந்த இலட்சியம் நிறைவேறும்வரை போராட்டம் ஓயவே மாட்டாது. அமெரிக்க ஏகாதிபத்தியம் தற்போது சமர்ப்பித்துள்ள சமாதானத் திட்டம் பாலஸ்தீன மக்களின் இலட்சியங்களை வெற்றி கொள்ளச் செய்யாது.

"பதினேழு வருடங்களாக இல்லாத சமாதானத் திட்டம் இப்போது எப்படி வந்தது. இந்தத் திட்டம் எங்களை ஏமாற்றுவதாகும். நாங்கள் நியாயமான எமது போராட்டத்தில் வெற்றிபெறுவோம் அல்லது செத்து மடிவோம். அமெரிக்க சமாதானத் திட்டத்தை ஏற்கவே மாட்டோம்" என்றார்.

## பேச்சுவார்த்தை

இந்த வருடத்துக்கான அரிசி கொள்வனவு பற்றி பர்மா, சீனா ஆகிய நாடுகளுடனான பேச்சு வார்த்தைகளை இலங்கை இந்த வாரத்துக்குள் முடித்துக் கொள்ள இருக்கிறது.

உள்நாட்டு, வெளிநாட்டு வர்த்தக அமைச்சின் அதிகாரிகள் இது சம்பந்தமாக இலங்கையில் உள்ள மேற்படி நாடுகளின் தூதுவர்களுடன் ஆலோசனை நடத்தி வருகின்றனர்.

## பேராதரவு

வாஷிங்டன், ஆக. 2

ஜனாதிபதி நிக்ஸன் தனது பதவியுடன் தொடர்புடைய பணிகளைக் கையாளும் வழிமுறைகளுக்கு 61 சதவீதமான அமெரிக்கர்கள் ஆதரவு தெரிவித்துள்ளனர்.

நாடு பூராவும் மேற்கொள்ளப்பட்ட பொதுசன அபிப்பிராய புள்ளிவிபர சேகரிப்பிலிருந்து இந்தத் தகவல் கிடைத்துள்ளது.

பொதுசன புள்ளி விபரங்களைத் தயாரிக்கும் தனியார் நிறுவனம் ஒன்று ஜூலை மாதம் 10-ம் திகதி முதல் 12-ம் திகதிவரை, நாடு பூராவும் 300 இடங்களில், வயது வந்தவர்கள் 1523 பேரைச்சந்தித்து இதற்கான தகவல்களைத் திரட்டியது. (ம)

## நடவடிக்கை

முன்னாள் உள்நாட்டு அமைச்சர் டாக்டர் டபிள்யூ. தகநாயக்கா மீது ஐக்கிய தேசியக் கட்சி ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளும் என அறியப்படுகிறது.

டாக்டர் தகநாயக்கா, ஐ. தே. கட்சியின் கொள்கைக்கு விரோதமாக அரசியல் அமைப்பு சபையில் பேசினார் என்று அவர்மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இன்று ஐ. தே. கட்சியின் நாடாளுமன்றக் குழு கூடுகிறது. அப்போது விளக்கம் தருமாறு டாக்டர் தகநாயக்காவிடம் கோரப்படவுள்ளது.

இது சம்பந்தமாக டாக்டர் தகநாயக்காவிடம் கேட்டபோது; "நான் அரசமைப்பு சபையில் பிரஸ்தாப கருத்துக்களை கூறியது உண்மைதான். இன்று நடைபெறும் ஐ. தே. க. நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் அந்தக் கருத்துக்களை மேலும் வலியுறுத்துவேன்" என்று கூறினார்.

## தற்கொலை

நல்லூர் வடக்கு வாசியும், 59 வயதான வயோதிபருமான அப்பாச்சி இராசையா என்பவர் நச்சுத் திராவகம் அருந்தித் தற்கொலை செய்து கொண்டார்.

திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. என். இராசநாயகம் ஸ்தலத்தில் மரண விசாரணை நடாத்தினர். தற்கொலை என தீர்ப்பளிக்கப்பட்டது. (7)


## அன்பும் காதலும்

நிரந்தரமாவதற்கு, வேண்டியவர்களை அடைவதற்கு, வேண்டாதவர்களை தவிர்ப்பதற்கு, திருமணம் நடைபெறுவதற்கு, தொடியவர்களை அடக்குவதற்கு, பரீட்சைகளில் சித்தியடைவதற்கு, வழக்கு என்பனவற்றில் வெற்றியடைவதற்கு, நோய் பீதி ஒழிந்து, முன்னேற்றத்திற்கு வழி செய்து கொடுக்கப்படும்.

எழுதுங்கள் அல்லது நேரில் சந்தியுங்கள்.

அரசாங்க அனுமதி பெற்ற குப்த விஞ்ஞானரீதி

**பி. எம். திஸ்ஸாநாயக்க,**

103, ஸ்ரீசங்கரஜ மாவத்தை, மருதானை.

தொலைபேசி: 33955.


இப் பத்திரிகையை அச்சிட்டவர்: சுயாதீனப் பத்திரிகா சமாஜம், 5, குணசேன மாவத்தை, கொழும்பு — 12 (இலங்கை).
வெளியிட்ட திகதி 3 ஆகஸ்ட் 1970
Thanthi 5, Gunasena Mawatha, Colombo 12.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org